இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 144 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 18 – வியாழக்கிழமை 02 ஜனவரி 2025 – சென்னை 20 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 144 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 18 - Thursday 02 January 2025 - Chennai 20 Pages ₹ 5.00

## நீலகிரி – கொடைக்கானல் – ஏற்காடு போன்ற மலைவாசஸ்தலங்களில் நடைபெறுவது போன்று

# சென்னை செம்மொழிப் பூங்காவில் “மலர்க் கண்காட்சி!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, எஸ்.ஜெகத்ரட்சகன், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

**சென்னை, ஜன. 2 -**

**நீலகிரி, கொடைக்கானல் - ஏற்காடு போன்ற மலைவாசஸ்தலங்களில் நடைபெறுவது போன்று சென்னை செம்மொழிப் பூங்காவில் “மலர்க்கண்காட்சி”யினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காலை திறந்து வைத்து சிறப்பிக்கிறார்!**

இதுகுறித்த விவரம் வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைவாசஸ்தலங்களில் உள்ள பூங்காக்களில் கோடை விழா நிகழ்ச்சிகள் மற்றும் மலர்க்கண் காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்நிகழ்வுகள் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இதைப்போன்று, சென்னை மக்களை கவரும் வகையில் 2022 ஆம் ஆண்டு முதல் சென்னையில் மலர்க்கண் காட்சி மிகுந்த வரவேற்புடன் நடத்தப்பட்டு வருகிறது.

தோட்டக்கலை பயிர்களின் வளத்தையும் வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் நோக்கில் கடந்த மூன்று மலர்க்கண் காட்சிகள் இத்துறையால் நடத்தப்பட்டுள்ளது.

இம்மலர்க்கண்காட்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் சென்னையில் பார்வையிட்டுள்ளனர். காலையில் இருந்து மாலை வரை நடைபெற்ற இக்கண்காட்சிகளை பெரியவர்கள், பள்ளிச் சிறுவர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் சிறு குழந்தைகள் என அனைவருமே பார்வையிட்டு மகிழ்ந்துள்ளார்கள்.

### கலைவாணர் அரங்கில் முதல் மலர்க் கண்காட்சி!

முதன் முதலில் சென்னையில் நடத்தப்பட்ட மலர்க்கண் காட்சி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தைப் போற்றும் வகையில் ஜூன் மாதம் 2022 ஆம் ஆண்டு கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

இக்காட்சியில் அரிய வகை மலர்கள் பல்வேறு வடிவ அமைப்புகளில் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டு 44,888 பேர் பார்வையிட்டனர்.

### 2ஆவது மலர்க் கண்காட்சி!

இரண்டாவது மலர்க்கண் காட்சி ஜூன் மாதம் 2023 ஆம் ஆண்டு செம்மொழிப் பூங்காவில் நடைபெற்றது.

### 3ஆவது மலர்க் கண்காட்சி!

இக்காட்சியை 23,302 பேர் பார்வையிட்டுள்ளனர். மூன்றாவது மலர்க்கண் காட்சி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் பிப்ரவரி மாதம் 2024 ஆம் ஆண்டு நடைபெற்றது. இக்கண்காட்சிகளை 1,09,027 பேர் பார்வையிட்டனர்.

### 4ஆவது மலர்க் கண்காட்சி!

தற்போது நான்காவது சென்னை மலர்க்கண் காட்சி 2025 இன்று (ஜனவரி 2 ஆம் தேதி) காலை முதல் நடைபெற உள்ளது.

இக்காட்சிக்கு செவ்வந்தி, ரோஜா, பெட்டுனியா, செண்டு மல்லி போன்ற 50 வகையிலான மலர்கள் 15 இலட்சம் மலர்த் தொட்டிகளில் காட்சிப்படுத்தப்பட உள்ளது. இம்மலர்த்தொட்டிகள் யானை, மயில், இரயில், ஆமை, படகு, வண்ணத்துப் பூச்சி, அன்னப்பறவை, நடன மங்கைகள், ஐஸ் கிரீம், ஜீப் போன்ற 20 வகையான வடிவங்களில் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

இம்மலர்க்கண்காட்சி இன்று (2025 ஜனவரி 2) காலை துவங்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு நடைபெற உள்ளது. இதற்கான நுழைவுச்சீட்டை https://mhorticulture.in/spetickets/ இணையதளம் வாயிலாகவும் நேரடியாக செம்மொழிப் பூங்காவிலும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இம்மலர்க் கண்காட்சியை முதல் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (2.1.2025) காலை திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

அண்மையில் தமிழக முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் 31ந் தேதி வரை 1,86,580 பார்வையாளர்கள் ஆர்வமுடன் கண்டுகளித்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க நாளை முதல் வீடு வீடாக டோக்கன்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன. 2 -*

பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான டோக்கன்கள் நாளை முதல் ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் வீடு வீடாக விநியோகம் செய்யப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகள் மூலம் இதற்கான டோக்கன்கள் ஜனவரி 3ம் தேதி முதல் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் விநியோகம் செய்ய டோக்கன் அச்சடிக்கும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.

“ஜனவரி 3ம் தேதி முதல் ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் வீடு வீடாக டோக்கன் விநி யோகம் செய்யப்படும். பரிசுத் தொகுப்பை பெறுவதற்கான நாள், நேரம் ஆகிய விவரங்கள் டோக்கனில் இடம்பெற்றிருக்கும். தினமும் காலையில் 100 பேர், பிற்பகலில் 100 பேர் பெறும் வகையில் டோக்கன் விநியோகம் செய்யப்படும்” என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, அனைத்து மண்டல இணை பதிவாளர்கள், சென்னை மண்டல கூடுதல் பதிவாளருக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்.சுப்பையன் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: -

பரிசுத் தொகுப்பை ரேஷன் கடைகள் மூலம் வழங்குவது தொடர்பாக அரசாணைகளில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை தவறாமல் பின் பற்ற வேண்டும். அனைத்து ரேஷன் கடைகளுக்கும் பரிசுத் தொகுப்புகள் சென்றடைவதை உறுதிசெய்ய வேண்டும்.

பரிசுத் தொகுப்பு விநியோக அட்டவணை விவரத்தை காவல் துறைக்கு முன்கூட்டியே தெரிவித்து, ரேஷன் கடைகளுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். எந்தவித புகாருக்கும் இடமின்றி பரிசுத் தொகுப்பை விநியோகம் செய்ய வேண்டும் என்றார்.

## 2025 - ஆங்கிலப் புத்தாண்டையொட்டி - அமைச்சர் பெருமக்கள் - கழக நிர்வாகிகள் -

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

## முதல்வர் இல்லத்தில் பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டு வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தனர்!

**சென்னை, ஜன. 2 -**

**ஆங்கிலப் புத்தாண்டையொட்டி கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.**

2025 ஆங்கில புத்தாண்டு நேற்று (1.1.2025 – முதன்கிழமை) உற்சாகமாக கொண்டாடப்பட்டது. ஆங்கில புத்தாண்டையொட்டி சென்னை ஆழ்வார்பேட்டை முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஏராளமான பொதுமக்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தி.மு.க. மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.

அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ. அன்பரசன், உள்ளிட்டோர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, ஜெகத்ரட்சகன், கலாநிதி வீராசாமி, கதிர் ஆனந்த், இரா. கிரிராஜன், மலையரசன், அருண் நேரு ஆகியோரும் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன் ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்களும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

தொழிலாளர் நலவாரியத் தலைவர் பொன்குமார், முன்னாள் டி.ஜி.பி. சைலேந்திர பாபு உள்ளிட்டோரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வாழ்த்துப் பெற்றனர்.

பல்லாயிரக்கணக்கான கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துப் பெற்றனர்.

### மாற்றுத் திறனாளிகள் வாழ்த்துப் பெற்றனர்!

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் தங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.